# சாட்சியின் வாக்குமூலம்

## திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்

**அசல் வழக்கு எண் : 150/2014**

**PW2 – திரு. விஷ்ணு த/பெ.**

**11.03.2026**

சாட்சி சத்திரப்பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**நேரம் 13.15 மணி**

நான் S3 ஐஸ்வர்யம் பிளாட்ஸ், மளிகை தெரு, விவேகானந்தா நகர், அம்பத்தூர் குடியிருந்து வருகிறேன். எத்தனை வருடமாக குடியிருந்து வருகிறேன் என்றால் 2007 ல் இருந்து குடியிருந்து வருகிறேன். அவ்வாறு சத்தியபிரமாண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். நான் எந்த வருடம் பிறந்தேன் என்றால் 1998 ஆம் ஆண்டு பிறந்தேன். மாவடட உரிமையியல் நீதிமன்றத்தில் OS 145/2013 வழக்கு போடும் வழக்கு குறித்த விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் அப்போது நான் 11 ஆம் வகுப்பஹ படித்துக்கொண்டிருந்தேன். அந்த நேரத்தில் என்னுடைய வயது 15 என்றால் சரிதான். OS 145/2013 வழக்கு எதற்காக போடப்பட்டது என்றால் என் பெரியப்பாவும் ஊர்தலைவரும் சேர்ந்து பார்க்கிற்கான நிலத்தை விற்க பார்த்தார்கள். அதை விற்க கூடாது என்பதற்காக வழக்கு தொடுத்தோம். நான் சொல்வது சரியல்ல என்றாலும் அரசு நிலத்தில் நூலகம் கட்டக்கூடாது என வழக்கு தொடரப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விற்பனையை தடுப்பதற்காக பிராதில் Prayer இல்லை என்றால் சரியல்ல. அந்த இடத்திலுள்ள கட்டிடத்தை அப்புறப்படுத்துவதற்காக வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் அப்போது அந்த கட்டிடத்தை கட்டுவதற்கு அனுமதியில்லை. இடைக்கால உத்தரவு பெறுவதற்காக வழக்கு தொடுத்தோம். அந்த உத்தரவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியாது. நான் பொய்யான தகவலை நீதிமன்றத்தில் கொடுக்கிறேன் என்றாலும் மேற்படி வழக்கு 20-04-2022 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தற்போது தான் தெரியவருகிறது. நான் தற்போது எந்த வழக்கிற்காக சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன் என்றால் என் தாத்தா மற்றும் பாட்டியின் சொத்து பாலசுப்பிரமணி என்

பெரியப்பா வசம் தான் உள்ளது அனைவருக்கும் சொத்து வேண்டுமென்று வழக்கு தாக்கல் செய்துள்ளோம். இந்த வழக்கு சொத்து எங்கே உள்ளது என்றால் வேப்பம்பட்டில் உள்ளது. அதன் சர்வே எண் சரியாக ஞாபகமில்லை. என் பாட்டியும், என் தாத்தாவும் வேப்பட்டில் தான் வாழ்ந்து வந்தார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்து என் பாட்டி கிரைய பெற்ற சொத்து என்றால் எனக்கு சரியாக தெரியாது. இந்த சொத்தை என் பாட்டி 1ஆம் பிரதிவாதி பாலசுப்பிரமணி பெயருக்கு செட்டில்மெண்ட் செய்து வைத்துள்ளார்கள் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. அந்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் என் தாத்தா சந்திரசேகர் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என எனக்கு தெரியாரு. 1ஆம் பிரதிவாதியை தவிர சொத்தில் பாகம் கேட்க வேறு யாருக்கும் உரிமையில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 2ஆம் வாதியாகிய என் தந்தையை தவிர்த்து மற்ற வாதிகளுக்கு வழக்கை நடத்துவதற்கு எந்த ஆர்வமும் இல்லை என்றால் சரியல்ல. 2ஆம் வாதியின் மகன் என்பதால் தந்தைக்கு பவ்வியப்பட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**நேரம் 13.25 மணி**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.